## இயல் 7.5 - வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.5.2.B

வடிவியல் - வட்டம் - வரையறையும் உதாரணங்களும்


Geometry - Circle - Definition & Examples

## வடிவியல் - வட்டம் - வரையறையும் உதாரணங்களும்

① ஒரு புள்ளியைச்சுற்றி ஒரே தொலைவில் உள்ள அனைத்துப் புள்ளிகளையும் இணைத்து வரையப்படும் ஒரு வடிவமே **வட்டம்** ஆகும்.

② நடுவில் நாம் எடுத்துக்கொண்ட நிலையான புள்ளி **மையப்புள்ளி** என்றழைக்கப்படுகிறது.

③ ஒரு வட்டத்தில் இணைக்கப்பட்ட அனைத்துப் புள்ளிகளும் **வட்டப்பரிதியில் அமைந்துள்ள புள்ளிகள்** என்றழைக்கப்படுகின்றன.





① வட்டப்பரிதியில் அமைந்துள்ள ஏதேனும் இரு புள்ளிகளை இணைக்கும் கோடு **நாண்** எனப்படும்.


② மையப்புள்ளி வழியாகச் செல்லும் நாண் **விட்டம்** எனப்படுகிறது.

③ மையப்புள்ளியையும் வட்டப்பரிதியில் அமைந்துள்ள ஏதேனும் ஒரு புள்ளியையும் இணைக்கும் கோடு **ஆரம்** எனப்படும்.


④ ஒரு வட்டப்பரிதியில் எண்ணிலடங்காப் புள்ளிகள் உள்ளது போல் அப்புள்ளிகளை இணைத்து உருவாகும் நாண்களும் விட்டங்களும் ஆரங்களும் எண்ணிலடங்காதவையே ! . . .





### நாண் - உதாரணங்கள்



### விட்டம் - உதாரணங்கள்




### ஆரம் - உதாரணங்கள்



① ஒரு மையப்புள்ளியைக் கொண்டு, வெவ்வேறு ஆரங்களை உடைய ஒன்றிற்கு மேற்பட்ட வட்டங்கள் அமையுமெனில் அவற்றை **பொது மைய வட்டங்கள்** எனக் குறிப்பிடுவோம்.

② அவற்றின் வேறுபட்ட ஆரங்களை $r_1$, $r_2$, $r_3$ எனக்குறிப்பிடுவது மரபு.

③ உட்புறம் அமைந்துள்ள இரு வட்டங்களுக்கு இடைப்பட்ட பகுதியின் பரப்பளவு $= \pi\ ({r_2}^2 - {r_1}^2)$




## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/GEput2tHqEs

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Saturday 21st January, 2023 :: 16:38 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**